අත්‍යවශ්‍ය සේවා කොමසාරිස් ජනරාල් කාර්යාලය
அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம்
OFFICE OF THE COMMISSIONER GENERAL OF ESSENTIAL SERVICES

2025 டிசம்பர் 01: இரவு 09.30 மணி
File Number : 2025/02

# ஊடக அறிக்கை

## அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் விலையேற்றம் தொடர்பானது

தற்போது நிலவும் அனர்த்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, சில வர்த்தகர்கள் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை அநியாயமாகப் பயன்படுத்தி, நுகர்வோர் பொருட்களை மிக அதிக விலைக்கு விற்க முயற்சிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள், அத்தியாவசிய சேவைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் கீழ் சட்டவிரோதமானவை ஆகும்.

இலங்கைப் பிரஜைகளாக நாம் அனைவரும் ஒற்றுமையுடனும் முன்மாதிரியாகவும் செயற்பட வேண்டிய இச்சந்தர்ப்பத்தில், நுகர்வோர் பொருட்களை அநியாயமான அதிக விலைக்கு விற்பதன் மூலம் சட்டவிரோத இலாபம் பெற முயற்சிப்பது நெறிமுறையற்றதும் சட்டவிரோதமுமான செயலாகும்.

எனவே, தற்போதுள்ள அனர்த்த நிலைமையைப் பயன்படுத்தி விலையை அதிகரிப்பது, அத்தியாவசியப் பொருட்களைத் தேவையற்ற முறையில் களஞ்சியப்படுத்தி பதுக்கி வைப்பது போன்ற அநியாயமான அல்லது தீங்கிழைக்கும் வர்த்தகத் தந்திரங்களைக் கடைப்பிடிக்கும் எந்தவொரு வர்த்தக நிறுவனம் அல்லது தனிநபர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதன் மூலம் அறியத் தருகிறோம்.

அனைத்து வர்த்தகர்களும் அதிகபட்ச சில்லறை விலை (Maximum Retail Price - MRP) குறிக்கப்பட்ட பொருட்களை அதே விலையிலும், ஏனைய பொருட்களை நியாயமான விலையிலும் விற்பனை செய்வதன் மூலம் ஒவ்வொரு பிரஜைக்கும் நுகர்வோர் பொருட்கள் தொடர்ச்சியாகக் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

அத்தியாவசிய சேவைகளின் ஆணையாளர் நாயகம்

**பி.கெ.பிரபாத் சந்திரகீர்த்தி**
**அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்**

**Email Address: cg@esgovsl.com**
අංක 150, ආර්.ඒ. ද මෙල් මාවත, කොළඹ 03, ශ්‍රී ලංකාව
எண். 150, ஆர்.ஏ. டி மல் மாவத்தை, கொழும்பு 03, இலங்கை
No. 150, R.A. De Mal Mawatha, Colombo 03, Sri Lanka